*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Article DOI: https://doi.org/10.63300/tm07042026.45

# Economic background of women in Balakumaran's novels

**S. Thiruppathi[1*], Dr.M. Selvarasu[2],**
[1]Research Scholar (Part time), Department of Tamil, Ganesar College of Arts and Science, (Affiliated to Bharathidasan University) Melaisivapuri- 622403
[2]Associate professor and research advisor (RTD), Department of Tamil, Ganesar College of arts and science, (Affiliated to Bharathidasan University ) Melaisivapuri- 622403
*Correspondence: thiruppathiraja183@gmail.com.

**Article Info**
Received on 25-April-2026, Revised on 26-April-2026, Accepted on 26-April-2026, Published on 01-May-2026

## ABSTRACT

Human life is fundamentally centered on economics. Indeed, it is the economy that determines the various circumstances and contexts of human existence. In this regard, Balakumaran's novels illuminate the economic standing and background of women within the social fabric where men and women coexist. Through subtle and nuanced evidence, Balakumaran illustrates how women—whether highly educated professionals holding prestigious positions, those without formal education, or those engaged in domestic life—navigate their lives from an economic perspective. Women constitute an integral part of society; they must attain economic self-sufficiency, for only then can their lives be secure and ensure a dignified social existence. Specifically, by focusing on characters drawn from the middle class, the author has poignantly and profoundly chronicled economic struggles, the pursuit of financial independence, and the myriad challenges that arise from material deprivation.

***KEYWORDS:*** *Porulatharam, Thanniraivu, Pattrakurai , Semippu, Padhukappu , Poruladhara Sikkal.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).
Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

Tamilmanam

# பாலகுமாரன் நாவல்களில் பெண்களின் பொருளாதாரப் பின்னணி

[1]**சீ. திருப்பதி,** பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, கணேசர் கலை அறிவியல் கல்லூரி (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது), மேலைச்சிவபுரி - 622407

[2]**முனைவர் ம. செல்வராசு ,** நெறியாளர், இணைப் பேராசிரியர் (ம) நெறியாளர் (ப. நி), தமிழ்த்துறை, கணேசர் கலை அறிவியல் கல்லூரி ,(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது) மேலைச்சிவபுரி – 622407

**ஆய்வுச் சுருக்கம்**

மனித வாழ்க்கை பொருளியலை மையமாகக் கொண்டது. மனித வாழ்வின் பல்வேறு சூழல்களையும் பொருளாதாரமே முடிவு செய்கிறது. அவ்வகையில் பாலகுமாரனின் நாவல்கள் ஆண்களும் பெண்களும் இணைந்து வாழும் சமூக வாழ்வில் பொருளாதார நிலையில் பெண்களின் பின்னணி என்ன என்பதை எடுத்துக் காட்டியுள்ளன. கல்வி கற்று உயர் நிலையில் பெரும் பதவி வகிக்கும் பெண்களும் கல்வி கற்காத பெண்களும் குடும்ப வாழ்வில் உள்ள பெண்களும் எவ்வாறு தம் வாழ்க்கையைப் பொருளாதார நோக்கில் எதிர்கொள்கின்றனர் என்பதை நுட்பமான சான்றுகளின் வாயிலாக பாலகுமாரன் விளக்கியிருக்கிறார். பெண் என்பவள் சமூகத்தின் ஓர் அங்கம் அவள் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற வேண்டும் அப்போதுதான் அவள் வாழ்க்கை பாதுகாப்பாகவும் சிறந்த சமூக இருப்பாகவும் அமையும். குறிப்பாக நடுத்தர வர்கம் சார்ந்த பாத்திரங்களைக் கொண்டு பொருளாதாரச் சிக்கல்கள், பொருளாதாரத் தன்னிறைவு, பொருள் இன்மையால் வாழ்வில் ஏற்படும் சிக்கல்கள் முதலியவற்றை ஆழமான நோக்கில் பதிவு செய்துள்ளார்.

**திறவுச் சொற்கள்**

பொருளாதாரம், தன்னிறைவு, பற்றாக்குறை , சேமிப்பு, பாதுகாப்பு, பொருளாதாரச் சிக்கல்

**முன்னுரை**

தமிழ் நாவலாசிரியர்களில் குறிப்பிடத்தக்கவர் பாலகுமாரன். நடுத்தர வர்க்கத்தை அடிப்படையாகக் கொண்டு நாவல்கள் படைத்தவர்களில் குறிப்பிடத்தக்கவர். குறிப்பாக அவரது படைப்புகள் நடப்பியல் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டவை. ஆண்கள் பெண்கள் மற்றும் சமூக உறவு நிலைகளை நாவல்களில் நுட்பமாக எடுத்துக் கூறிய அவர் பெண்களுக்குக் குடும்ப வாழ்விலும் சமூக வாழ்விலும் பொருளாதாரம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை எடுத்துக்காட்டியுள்ளார். பெண் தன்னுடைய இருப்புக்கும் சமூக வாழ்வுக்கும் பொருள் ஈட்ட வேண்டிய நிலையில் இருக்கிறாள். சரியான குடும்பப் பின்னணி பொருளாதாரப் பின்னணி வாய்க்காத நிலையில் பொருளாதார மேம்பாட்டுக்காகப் பெண்கள் எத்தகைய சிக்கல்களைச்

, | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

சந்திக்கிறார்கள் என்பதை நாவல்களில் உணர்த்தியுள்ளார். எனவே பொருளாதாரப் பின்னணியில் பெண்கள் எவ்வாறு தங்கள் வாழ்வை எதிர்கொள்கிறார்கள் என்பதை ஆய்வு செய்யும் பொருட்டு இக்கட்டுரை பாலகுமாரன் நாவல்களில் பெண்களின் பொருளாதாரப் பின்னணி குறித்து ஆராய்கிறது.

**பொருளாதாரம் - விளக்கம்**

**"பொருள் என்னும் சொல் மரபாக சமூக பொருளாதார அரசியல் உள்ளிட்ட பல்வேறு சமூகக் கூறுகளைக் குறிக்க வழங்கப்படுவதால் இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமூக விஞ்ஞான வளர்ச்சியின் விளைவாகத் தோன்றிய பொருளாதாரம் பொருளியல் போன்ற கருத்தமைப்புகளைக் குறிக்கின்ற சொல்லாகவும் அமையத்தக்கது எனலாம்" (நா. வேலம்மாள், தமிழ் நாவல்களில் பொருளாதாரச் சிக்கல்கள், ப.1) என்று பொருளாதாரத்திற்கு விளக்கம் தருவர். "குடும்ப நிர்வாகத்தில் ஆண்டான் அடிமை கணவன் மனைவி பெற்றோர் பிள்ளைகள் ஆகிய மூன்று உறவுகள் நிலவுகின்றன. இவற்றுக்குப் புறமே நான்காவதாகக் குறிக்கத்தக்கது நிதி செயல் வகையாகும். இந் நிதிச் செயல் வகையை மனிதன் பெறுவதற்குப் பல வழிகளை இயற்கை வழங்கியுள்ளது. அவற்றை மனிதன் நாடோடியாகவும் உழவனாகவும் கொள்ளைக்காரனாகவும் மீன்பிடிப்பவனாகவும் வேடனாகவும் இருந்து சேகரிக்கிறான். இவ்வகைச் செயல்களே குடும்ப நிர்வாகம் ஆகும்" என்று குறிப்பிடுவர். (தே. வேலப்பன், பொருளியல் தொடக்க நூல் , பக். 1, 2 )** இச் சிந்தனை மனிதனின் வாழ்க்கைக்குப் பொருளே அடிப்படை என்பதை உணர்த்துகிறது. பொருளாதாரம் என்பதற்கு அறிஞர்கள் சுருக்கமாக, **"பணத்தைக் கொண்டு அளவிட முடிகிற பொருள் சார் நலம் பற்றியது பொருளாதாரம்" (எஸ். வி. பாலசுப்பிரமணியன், த.ச. செல்லத்துரை, நுண்ணியப் பொருளியல், ப.4)** என்று விளக்கம் தருகின்றனர்.

**கல்வி அறிவு**

மனித வாழ்க்கை தற்காலத்தில் பன்முகமான வளர்ச்சியை எட்டியிருக்கிறது. குறிப்பாக, கல்வி அறிவுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் காலமாகத் தற்காலம் அமைந்திருக்கிறது . ஒவ்வொரு விதமான பணிக்கும் ஒவ்வொரு விதமான கல்வி முறை இன்று வழக்கத்தில் இருக்கிறது. எனவே தற்காலத்தில் கல்வி எழுதுவது படிப்பது அனுபவத்தைப் பெறுவது என்னும் நோக்கில் மட்டும் பயன்படுத்தப்படாமல் பணி அடிப்படையிலும் பொருளாதார அடிப்படையிலும் தேவையான ஒன்றாக மாறியிருக்கிறது. குறிப்பாகப் பண்டைக் காலத்தை ஒப்பிடும்போது தற்காலத்தில் பெண்கள் மிகுதியாகக் கல்வி கற்றுத் தங்களுக்கான இருப்பை உறுதி செய்வதோடு பொருளாதாரப்

, | Copyright © Author(s)

பின்னணியிலும் உயர்ந்து விளங்குகின்றனர். பாரதிதாசன், **"பெண்கட்குக் கல்வி வேண்டும் குடித்தனம் பேணுதற்கே / பெண்கட்குக் கல்வி வேண்டும் மக்களைப் பேணுதற்கே /பெண்கட்குக் கல்வி வேண்டும் உலகினைப் பேணுதற்கே / பெண்கட்குக் கல்வி வேண்டும கல்வியைப் பேணுதற்கே" (பாரதிதாசன், குடும்ப விளக்கு, விருந்தோம்பல்)** என்று பெண் கல்வியின் முக்கியத்துவத்தைப் பதிவு செய்திருக்கிறார். பெண்கள் கல்வி கற்றுக் குடும்பத்தைப் பேணுவதோடு பொருளாதார வளம் பெற்றிருந்தால் குடும்பத்திற்கு மேலும் பயனுடையதாக அமையும். கல்வி பரவலாக்கம் செய்யப்பட்ட நிலையில் மிகுதியான பெண்கள் கல்வி கற்றுத் தங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்டுள்ளதோடு ஆளுமையுடன் விளங்கவும் உறுதியோடு சமூகத்தை எதிர்கொள்ளவும் கற்றிருக்கின்றனர் எனில் மிகையில்லை.

**பெண்களுக்குக் கல்வியின் தேவை**

கல்வி மனிதனின் ஆளுமைப் பண்பை வளர்ச்சியடையச் செய்வதுடன் அவர்களின் வாழ்க்கையை வளப்படுத்தவும் உதவுகிறது. குறிப்பாகப் பெண்களின் வாழ்க்கை அடிமை நிலையில் இருந்து மறுமலர்ச்சி பெறக் கல்வி இன்றியமையாததாகிறது. குடும்பத்தைப் பொறுப்பான முறையில் வழிநடத்தவும் குழந்தைகளை அறிவார்ந்தவர்களாக உருவாக்கவும் சமூகத்தின் வளர்ச்சிக்கும் பெண் கல்வி இன்றியமையாததாகிறது. குடும்ப வாழ்வில் ஆண் மட்டும் பொருள் தேடும் நிலையிலிருந்து அவனது பொருளாதாரச் சுமையைப் பெருமளவில் குறைக்கும் வாய்ப்பைப் பெண் கல்வி ஏற்படுத்தித் தருகிறது எனக் கூறலாம். பாலகுமாரன் தன் நாவல்களில் பெண்கள் பொருளாதார நிலையில் எவ்வாறு வாழ்கின்றனர் என்பதை அறிந்து கொள்ளச் சான்றாக பல்வேறு பாத்திரங்களைப் படைத்திருக்கிறார். வேலை வாய்ப்பு திருமணம் வாழ்க்கை முதலான எல்லா நிலைகளிலும் பொருளாதாரம் இன்றியமையாதது என்பதை பாலகுமாரன் படைப்புகள் எடுத்துக்காட்டியுள்ளன.

**வேலைவாய்ப்பு**

இன்றைய நிலையில் பணிவாய்ப்பு மலிந்திருக்கிறது. எல்லாவிதமான கல்வித் தகுதிக்கும் பணி கிடைக்கிறது. ஆனாலும் படிப்புக்கு ஏற்ற பணி பெறுவது சமுதாய வாழ்வில் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. பெண்கள் பொருளாதாரத்தில் முன்னேற வேண்டுமானால் படிப்பு அவசியம். ஆனால் பல குடும்பங்களில் பெண் கல்வி மறுப்புச் சூழல் நிலவுகிறது. படிக்காத பெண்கள் அல்லது நல்ல வேலை வாய்ப்புக்குத் தகுதி பெறாத பெண்கள் தங்கள் நிலைக்கு நொந்து கொள்வதை பாலகுமாரன் பல சான்றுகளின் வழியாக எடுத்துக்காட்டியுள்ளார். இனி என் முறை என்னும் நாவலில் படிப்புக்குத் தடை விலகி இருப்பதை தேன்மொழி தாய் பாத்திரத்தின் வழி விளக்குகிறார்.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

**"நம்ம ஜாதியில எட்டாவது போதும்ன்னுடுவாங்க இப்பத்தான் எல்லா ஜாதியும் படிப்பு படிப்புன்னு அலையுதே சரி போகட்டும்னு விட்டுட்டேன்" (பாலகுமாரன், இனி என் முறை, ப.167)** இக்கருத்து பெற்றோரின் கல்வி மறுப்பு என்னும் மனநிலை மாற்றத்தை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கிறது. பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ள தேன்மொழி ராணி என்னும் பாத்திரங்கள் தங்கள் கல்வித் தகுதியின் மூலமே பெருளை ஈட்டுகின்றனர். உடல்நலம் இல்லாமல் துன்புறும் சகோதரி மலர்க் கொடியின் மருத்துவச் செலவையும் சமாளிக்கின்றனர்

**நம்பிக்கையும் பொருளாதாரம்**

கல்வி பெண்களின் நம்பிக்கையைச் சீர்படுத்துகிறது. தன்னம்பிக்கையோடு அவர்கள் தொடர்ந்து இயங்கவும் சிந்தித்துச் செயல்படவுமான வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது. கல்வி கற்ற பெண்களின் எண்ண ஓட்டம் பொருளாதார மேம்பாட்டுக்கான சிந்தனையில் சிறந்து விளங்குகிறது எனலாம். பாலகுமாரன் மீட்டாத வீணை நாவலில் பன்னிரண்டாம் வகுப்புப் படிக்கும் ஹேமா என்னும் பாத்திரத்தை நம்பிக்கை மிக்க பாத்திரமாகப் படைத்திருக்கிறார். பன்னிரண்டாம் வகுப்புப் படிக்கும் போதே தீர்க்கமான சிந்தனை நிறைந்த பெண்ணாகவும் தம் எதிர்காலம் குறித்த சிந்தனை நிறைந்தவளாகவும் விளங்குகிறாள். யாருடைய உதவியும் இன்றித் தானே முடிவெடுக்கும் திறனை வளர்ப்பதில் கல்வி தன்னிகரற்றது என்பதை ஹேமா பாத்திரம் மூலம் பாலகுமாரன் விளக்கியுள்ளார். கல்வி கற்கவில்லை எனினும் பெண்கள் பொருளாதாரத்திற்காகச் சிறு சிறு பணிகளிலும் ஈடுபடுவதை நாவலாசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார். குறிப்பாக கடைகளில் பணி செய்தல் தொலைபேசி நிலையங்கள் பூ கட்டுதல் முதலான பணிகளைப் பெண்கள் தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதற்கே பயன் கொள்கின்றனர். முள் முடிச்சு நாவலில் விமலா என்னும் பெண் வீட்டு வேலை பார்ப்பதுடன் வீட்டு முதலாளி நடத்தும் தொலைபேசி நிலையத்தையும் பார்த்துக் கொள்கிறாள். அவளது வருமானம் மாதம் ஐநூறு ரூபாய் என்றாலும் அவளது பொருளாதாரப் பாதுகாப்புக்கு அத்தொகை பெருமளவு உதவி செய்கிறது. இதனை **"ஐநூறு விமல்லாவுக்குப் பெரிய தொகை. அதை அவள் வீட்டுக்குத் தர வேண்டாம் என்றாலும் அவள் செலவுக்காக அந்த ஐநூறு ரூபாய் தேவையாக இருந்தது. வேலை தேடவோ ஸ்னோ போடவோ சோப்பு சீப்பு வாங்கவோ புடவைக்குச் சீட்டுக் கட்டவோ அந்தக் காசு தேவையாக இருந்தது" (பாலகுமாரன், ஒருவழிப்பாதை, ப.144)** என்னும் சிந்தனையால் அறியலாம். பந்தயப்புறா நாவலில் வேலைக்குச் செல்ல அனுமதிக்கப்படாத திருநிறைச்செல்வி பணிக்குச் செல்லும் பெண் ஒருத்தியிடம் பேசும்போது அவள் பேச்சு பணியில் தன் நிலை என்ன தான்

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 05 (May-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07052026*

அடைந்த மேம்பாடு என்ன என்பதை அறியத் துணை செய்கிறது **"நான் 17 வயசுல கவர்மெண்ட் வேலைக்குப் போனவ. இப்ப முப்பத்தாறு வயசு. கெட்டா போயிட்டேன்? குடித்தனம் பண்ணலையா? குழந்தை பெத்துக்கலையா? ஆயிரத்து எண்ணூறு சம்பளம். இரண்டு பேரும் சம்பாதிக்கிறதுல நாலு காசு பார்க்க முடியுது இரண்டு காசு சேர்க்க முடியுது. நல்ல பள்ளிக்கூடத்தில் பையனை சேர்க்க முடிஞ்சது" (பாலகுமாரன், பந்தயப் புறா, ப.111)** பாலகுமாரனின் சிந்தனைகள் பெண்களின் நம்பிக்கையும் புரிதலும் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவுவதை உறுதிப்படுத்துகின்றன.

**பொறுப்பு மிக்க பணிகளில் பெண்கள்**

சமுதாய வாழ்வில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் உயர்ந்த பதவிகளை வகிக்க இயலும் என்பதையும் பொருளாதாரத்தில் தன்னிறைவு அடைய முடியும் என்பதையும் சமூக மாற்றத்திற்கு உதவ இயலும் என்பதையும் பாலகுமாரன் நாவல்களில் பதிவு செய்துள்ளார். குறிப்பாக, பலாமரம் நாவலில் ரமணி ஐஏஎஸ் அதிகாரியாகப் பணியேற்றுச் சிறுவர் சீர்திருத்தப் பள்ளியின் மாணவர்களை நல்ல நிலைக்குக் கொண்டுவர உறுதி ஏற்றுச் செயல்படுவது, சுழல் காற்று நாவலில் சூடாமணி சிபிஐ அதிகாரியாகப் பணியாற்றுவது எனப் பெண்கள் ஏற்றுச் செய்யும் உயரிய பணிகளைப் பதிவு செய்கிறார். பெண்கள் பொறுப்பு மிக்க பெரிய பதவிகளில் அமரும்போது இயல்பாகவே அவர்களின் பொருளாதாரம் வாழ்க்கைத் தரம் முதலியன மாற்றமடைவதை பாலக்குமாரன் கதைப்போக்கில் விளக்கியிருக்கிறார்.

**தனியார் துறையும் பொருளாதாரமும்**

பெண்கள் கல்வி கற்று அரசு பணியேற்றுப் பொருளாதாரத்தை முன்னேற்றிக் கொள்வதுபோலத் தங்கள் தேவைக்காகவும் வாழ்க்கைக்காகவும் தனியார் துறை வேலைவாய்ப்பையும் நாடுகின்றனர். அரசுப் பணி கிடைக்காத நிலையில் இரண்டாவது வாய்ப்பாக அவர்களுக்குத் தனியார் துறை வேலைவாய்ப்பு உதவுகிறது. மாலை நேரத்து மயக்கம் நாவலில் நிர்மலா தேவி என்னும் பாத்திரத்தை பாலகுமாரன் பொறியாளராகப் படைத்திருக்கிறார். இரவு பகல் பார்க்காமல் தன் பணியை மேற்கொள்கிறாள். தன்னால் சிறந்த பொறியாளராக விளங்க முடியும் சிறந்த ஆலோசனை வழங்க இயலும் என்பதை உறுதிப்படுத்தும் பாத்திரமாக படைக்கப்பட்டிருக்கிறாள்.

தனியார் துறை வேலைவாய்ப்பு பெண்களுக்குப் பொருளாதாரப் பாதுகாப்பைத் தரும் என்றாலும் அதில் உடல் நலன் மனநலன் சார்ந்த சிக்கல்கள் இருப்பதையும் பாலகுமாரன் சுட்டிக்

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 05 (May-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07052026*

காட்டுகிறார். தனியார் வேலை வாய்ப்புகளில் உழைப்பு அதிகம். ஓய்வில்லாமல் உழைக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகிறார்கள். தலையணைப் பூக்கள் நாவலில் நானூறு ரூபாய் சம்பளத்திற்காக உட்காரவும் நேரம் இல்லாமல் பணி செய்வதாக குறிப்பிடுவது கருதத்தக்கது **"பிரேமா நானூறு ரூபாய் சம்பளத்தில் சேர்ந்தாள். உட்காராமல் சுற்றி சுற்றி வந்தாள்" (பாலகுமாரன், தலையணைப் பூக்கள், ப. 48)**

**வறுமை நிலையும் பொருளாதாரமும்**

சமுதாய வாழ்வில் கல்வி பெண்களின் அறிவு சிந்தனை ஆகியவற்றின் மேம்பாட்டுக்குத் உறுதுணைக்கு புரிகிறது. கல்வி கற்க வாய்ப்பு இல்லாத பெண்களும் வறுமை நிலையில் வாடிய பெண்களும் கல்வி இல்லாத காரணத்தால் திருமண வாழ்வின் முன்பும் திருமண வாழ்வின் பின்பும் தங்களின் வாழ்வை எதிர்கொள்ள மிகுந்த சிரமத்திற்கு உள்ளாவதை பாலகுமாரன் நாவல்களில் நுட்பமாக பதிவு செய்துள்ளார். ஆண்கள் பொருளீட்ட இயலாத நிலையில் அல்லது குறைந்த வருவாய் ஈட்டும் நிலையில் குடும்பச் செலவுகளை ஈடுகட்டப் பெண்கள் பணிக்குச் செல்வது இயல்பு. வீட்டில் இருப்பதைவிட வேலை செய்து பொருள் ஈட்டுவதை அவர்கள் தங்களுக்கான சமூகப் பாதுகாப்பாகக் கருதுகின்றனர். பாலகுமாரன் வத்சலா அனிதா என்னும் பாத்திரங்கள் மூலம் இத்தகைய சூழலை நாவலில் பதிவு செய்திருக்கிறார். அகல்யா நாவலில் வத்சலா சிறிய சம்பள உயர்வு தன் தேவைகளை நிறைவேற்றும் என நினைக்கிறாள். அவளது எண்ண ஓட்டம் பின்வருமாறு அமைகிறது **"நானூறு ரூபாய்க்கு இவர்கள் சரி என்று சொன்னால் நன்றாக இருக்கும். காலையில் மோர் சாதமாவது சாப்பிட முடியும். பத்து ரூபாய் வாடகை அதிகம் கேட்கிற வீட்டுக்காரனுக்கு சரி என்று சொல்லிவிடலாம். இன்னொரு வாயில்புடவை வாங்கலாம்" (பாலகுமாரன், அகல்யா, ப.94)** சிறிய தேவைகளுக்குப் பெண்கள் துன்புறுவதை மேற்கண்ட பகுதி எடுத்துக்காட்டுகிறது.

தன் குடும்ப நிலையை மீட்டெடுக்க நினைக்கும் பெண் எத்தகைய கடுமையான சூழலையும் மீறி வெளிவரத் தயாராக இருப்பாள். அவளுக்கு மீண்டு வரப் பொருளாதாரம் முக்கியம் என்பதைத் திருப்பூந்துருத்தி நாவலில் பாலகுமாரன் விளக்குகிறார். வனிதா பாத்திரத்தின் கணவன் பணிக்குச் செல்லாத காரணத்தால் வீட்டுப் பொறுப்பைச் சுமக்க வேண்டியவளாக இருக்கிறாள். சிறு குழந்தையைத் தன் அம்மாவிடம் விட்டுவிட்டு உடல் உழைப்புப் பணியை ஏற்றுச் செய்வதற்குச் சித்தமாக இருக்கிறாள். இதனை, **"என் புள்ளையைப் பார்த்துக்கோ நான் வேலைக்குப் போறேன். பார்க் ஷெரடனில் ஹவுஸ் கீப்பர். நாலாயிரம் சம்பளம் முதுகு ஒடியும் வேலை" (பாலகுமாரன், திருப்பூந்துருத்தி, பக். 14 ,15 )** என்று கூறுகிறாள்.

**பெண்கள் பணிக்கு செல்வதன் நன்மைகள்**

பெண்கள் பணிக்குச் செல்லும் காரணத்தால் சுயசார்பு மிக்கவர்களாக மாறுகிறார்கள். தம்முடைய தேவைக்குப் பிறரை எதிர்பார்க்கும் நிலை அவர்களுக்கு இருப்பதில்லை. பெண்ணின் சுய பொருளாதாரம் தனிமனித, குடும்ப நிலையில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. எனக் கூறலாம் குடும்ப வாழ்வில் பெண்ணின் பணியும் அதனால் பெறும் பொருளும் பல மாற்றங்களை உண்டாக்குகிறது. பொருள் குடும்பத்தின் நிலையான அமைதிக்கு வழி வகுப்பதோடு குழந்தைகளின் பராமரிப்பு கல்வி முதலானவற்றிலும் கவனம் செலுத்த வழியமைத்துக் கொடுக்கிறது. குடும்பத்தில் ஏற்படும் பொருளாதார மாற்றம் சமூக மாற்றமாகப் பிரதிபலிக்கிறது. பெண்களின் சுயசார்பு அவர்களின் ஆளுமை அச்சமற்ற தன்மை நம்பிக்கை ஆகியவற்றை அதிகரிக்கிறது. பெண்கள் தங்களுக்கு இருக்கும் தொழில்நுட்ப அறிவைக் கொண்டும் பொருளாதார மேம்பாட்டை அடைய இயலும் என்பதை பாலகுமாரன் சுயதொழில் செய்யும் பெண்களின் வாயிலாக எடுத்துக்காட்டியுள்ளார். இதனை, இனி எல்லாம் சுகமே என்னும் நாவலில் காணலாம். நாவலில் கணவனை இழந்து மூன்று பெண்களோடு வாழும் சரஸ்வதி மிட்டாய் விற்கும் தொழில் செய்ய வங்கியில் கடன் பெற்றுத் தொழிலைத் தொடங்குகிறாள். வாழ்க்கையை எதிர்கொள்ளத் துணிபவர்கள் எந்த நிலையிலும் வெற்றி பெறுவார்கள் அவர்களின் வெற்றி பொருளாதார முன்னேற்றம் உடைய வெற்றியாகவும் அமையும் என்பதை பாலகுமாரன் விளக்குகிறார். பெண் பொருளாதார முன்னேற்றம் அடைவதன் மூலமாகச் சமுதாயக் கட்டுமானம் மாறுகிறது. அதன் அடிப்படை கல்வியாகும். கல்வியால் சுய சிந்தனையும் வாழ்க்கை குறித்த தெளிவான சிந்தனையும் கொண்ட பெண் தனித்து வாழ்வதற்கான தகுதியையும் தன் நிலையை உயர்த்திக் கொள்ளும் திறனும் பெறுகிறாள் ஆண்களுக்குப் பெண்கள் சரிநிகர் சமானமாகப் பல பணிகளை மேற்கொண்டாலும் ஆணோடு ஒப்பிடும்போது பல நிலைகளில் அவர்கள் சம்பளம் குறைவாக இருப்பதை நடைமுறை வாழ்க்கை எடுத்துக்காட்டுகிறது.

**பணியிடங்களும் சிக்கல்களும்**

பெண் தன் சூழல்களால் பணிக்குச் செல்லும் போதும் பொறுப்புள்ள பல பதவிகளை ஏற்கும் போதும் பெண் தானே என்னும் எண்ணம் சமூகத்தில் பரவலாகக் காணப்படுவதை நடப்பியல் தெளிவுபடுத்துகிறது. நடைமுறை வாழ்க்கையில் பெண் எதிர்கொள்ளும் சிக்கல்களும் பணியிடம் மற்றும் பொதுச் சூழலில் சந்திக்கும் சிக்கல்களும் மிகுதியாகும். பணி செய்யும் இடத்தில் இருந்து குறித்த நேரத்திற்கு வீட்டுக்குச் செல்ல வேண்டியவளாகப் பெண் இருக்கிறாள். அவளது மனதில் சமூகம் என்ன நினைக்குமோ என்னும் எண்ணமும் பாதுகாப்புக் குறித்த அச்சமும் இருப்பதை

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

மீட்டாத வீணை நாவலில் பாலகுமாரன் விளக்கியுள்ளார். அலுவலகங்களில் பணி செய்யும் பெண்கள் பன்முகமான பிரச்சனைகளைச் சந்திக்கிறார்கள். என்னவளே அடி என்னவளே நாவலில் ஜெயந்தி பாத்திரம் தன்னோடு பணியாற்றும் ராமச்சந்திரனைக் காதலிக்கிறாள் இதனை அறிந்த முதலாளி ஜெயந்தியை சினிமாவுக்கு அழைத்து அவளை நெருங்குகிறான். அந்நிலையில் அவள் அவனுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அங்கிருந்து செல்கிறாள் **"ராமச்சந்திரன் தொட்டா மட்டும்தான் சொர்க்கம் தெரியுமா? அவன் எழுந்து அவளை நோக்கி நகர்ந்தான். ஜெயந்தி மேசையைத் தூக்கி அப்படியே கவிழ்த்தாள். கைப்பையை எடுத்துக் கொண்டு வெளியேறினாள்" (பாலகுமாரன், என்னவளே அடி என்னவளே, பக். 50,51)** இச்செய்தி பெண்கள் பணியிடத்தில் பாலியல் துன்பத்திற்கு ஆளாவதை விளக்குகிறது.

**முடிவாக**

பாலகுமாரன் தன் படைப்புகளில் நடப்பியல் சிந்தனைகளை மிகுதியாகப் பதிவு செய்துள்ளார். பெண்கள் பொருளாதார முன்னேற்றம் அடைய வேண்டும் அதுவே அவர்கள் தனிமனித விடுதலை சமூக விடுதலை பெறுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் என்னும் அடிப்படையில் நாவல்களில் பெண் பொருளாதாரம் குறித்த சிந்தனைகள் பதிவு பெற்றுள்ளன. பெண் சுயமாக வாழ்வதற்குத் தரமான கல்வி வேலை வாய்ப்பு ஆகியன தேவை. எல்லா நிலைகளிலும் பெண்கள் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள குறைந்த பொருளாதாரத்தோடு போராடுகின்றனர் என்பதை அடித்தட்டு மக்களின் நடுத்தட்டு மக்களின் வாழ்க்கையாக நாவல்களில் பதிவு செய்திருக்கிறார். பெண்கள் முழுமையான சுதந்திரத்தோடு வாழவும் குடும்பத்தை பேணிக் காக்கவும் பெண்களின் பொருளாதாரம் இன்றியமையாதது என்பதை பாலகுமாரன் நாவல்கள் விளக்குகின்றன.

**துணை நூல் பட்டியல்**

[1.] பாலகுமாரன், இனி என் முறை , சென்னை : விசா பப்ளிகேசன், 2010
[2.] பாலகுமாரன், ஒரு வழிப்பாதை , சென்னை : திருமகள் நிலையம், 2010
[3.] பாலகுமாரன், பந்தயப்புறா, சென்னை: திருமகள் நிலையம், 1989
[4.] பாலகுமாரன் , தலையணைப் பூக்கள், சென்னை : திருமகள் நிலையம், 2012
[5.] பாலகுமாரன் , அகல்யா, சென்னை : வானதி பதிப்பகம் , 1982
[6.] பாலகுமாரன், திருப்பூந்துருத்தி, சென்னை : திருமகள் நிலையம் , 2000
[7.] பாலகுமாரன் , என்னவளே அடி என்னவளே, சென்னை : திருமகள் நிலையம், 2017

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

[8.] பாலசுப்பிரமணியன் எஸ். வி. செல்லத்துரை த.ச. நுண்ணியப் பொருளியல் சென்னை , தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் , 1979

[9.] பாரதிதாசன், குடும்ப விளக்கு, சென்னை: மணிவாசகர் பதிப்பகம், 2002

[10.] வேலப்பன் தே, பொருளியல் தொடக்க நூல் , சென்னை: தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 2018

[11.] வேலம்மாள் நா , தமிழ் நாவல்களில் பொருளாதாரச் சிக்கல்கள், சென்னை: என். சி. பி. எச், 2008

Tamilmanam